## பிரிவு –7

## மைய அரசின் பத்தாவது நிதி ஆணையம் செய்துள்ள நிதி ஒதுக்கீடுகளைப் பகிர்ந்து கொள்வதற்கான கோட்பாடுகள்

**5.7.1.** பத்தாவது நிதி ஆணையம் இந்திய அரசமைப்பின் 73வது மற்றும் 74வது திருத்தச் சட்டங்களையொட்டி நகர்ப்பகுதி மற்றும் ஊரக உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு வழங்கப்பட வேண்டிய, தற்காலிக மானியங்கள் பற்றி பரிந்துரைத்துள்ளது. 1995ஆம் ஆண்டு முதல் 2000வது ஆண்டு வரையிலான கால அளவுக்கான தன்னுடைய பரிந்துரைகளை அளிக்கும்போது பத்தாவது நிதி ஆணையம் ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கும் நிதியைப் பகிர்ந்தளிப்பதற்கு தனித்தனியாக இரு வெவ்வேறு கோட்பாடுகளைப் பின்பற்றியுள்ளது. அக்கோட்பாடுகள் வருமாறு:

(1) ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தனி நபர் ஒருவருக்கு ரூ.100/– என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

(2) நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு, 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு புள்ளி விவரங்களின்படி குடிசைப் பகுதிகளுக்கிடையேயான மக்கள்தொகை விகிதாச்சார அடிப்படையில் நிதியுதவி நிர்ணயிக்கப்படுகிறது.

**5.7.2** இதன்படி, பத்தாம் நிதி ஆணையம் பல்வேறு மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ் நாட்டிற்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றிய விவரங்கள் வருமாறு:

அடடவணை 5.33 பத்தாம் நிதி ஆணையத்தின் ஒதுக்கீடுகள்: (ரூபாய் கோடியில்)

| | 1995–96 | 1996–97 | 1997–98 | 1998–99 | 1999–2000 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| ஊரகம் | -- | 71.83 | 71.83 | 71.84 | 71.84 | 287.31 |
| நகர்ப்பகுதி | -- | 28.88 | 28.88 | 28.88 | 28.88 | 115.52 |
| மொத்தம் | -- | 100.71 | 100.71 | 100.72 | 100.72 | 402.83 |

**5.7.3.** மேற்சொன்ன தற்காலிக மானியங்களைப் பயன்படுத்துவது குறித்து, பத்தாம் நிதி ஆணையம் பின்வரும் வரையறைகளை வகுத்தளித்துள்ளது:

(1) இம்மானியங்கள், மாநில அரசிடமிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு கிடைக்கும் தொகைக்குக் கூடுதலானவையாக இருக்க வேண்டும்.

(2) மேற்சொன்ன மானியங்களைப் பயன்படுத்துவதற்குரிய விரிவான வழிகாட்டிக் குறிப்புகளுடன், உரிய திட்டங்களை அரசு வகுக்க வேண்டும்.

(3) நிதி ஆதாரங்களைத் திரட்டுவதன் மூலம், உள்ளாட்சி மன்றங்கள், பொருத்தமான இணைப் பங்குத் தொகைகள் வழங்க வேண்டும்.

(4) இந்த மானியம், சம்பளங்கள், ஊதியங்கள் குறித்த செலவுகளுக்காகப் பயன்படுத்தப்படக் கூடாது.

5.7.4. மத்திய அரசு பத்தாம் நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்கையில், பின்வரும் நிபந்தனைகளை விதித்தது:–

i) உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்படுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மாநில அரசு திட்ட நிதியின் ஒரு பகுதியாக இம்மானியம் கருதப்படும்.

ii) எந்த நோக்கத்திற்காக இம்மானியங்கள் ஒதுக்கப்பட்டனவோ அந்த நோக்கத்திற்காக குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் இம்மானியங்களை உரியவாறும், முழுமையாகவும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய உரிய ஏற்பாட்டு முறை வகுக்கப்பட வேண்டும்.

5.7.5. பத்தாம் நிதி ஆணையத்தின் வரையறைகள் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட மத்திய அரசின் நிபந்தனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட மானியங்களைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டிக் குறிப்புகளையும், முறையான ஏற்பாட்டு முறையையும் பரிந்துரைப்பதற்காக, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழுவில் பின்வரும் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இக்குழுக் கூட்டம் 24.6.1996 அன்று புது டில்லியில் நடைபெற்றது. புது டில்லி, நிதி ஆணையத்தின் இணைச் செயலாளர் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். இப்பிரச்சினைகள் குறித்து பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:–

1. பத்தாம் நிதிக் குழுவும் மத்திய அரசும் விதித்திருக்கும் வரையறைகள் தவிர வேறெந்த வழிகாட்டிக் குறிப்புகளையும் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அளிக்காது என முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், இந்திய அரசின் நகர்ப்பகுதி விவகாரங்கள் வேலை வாய்ப்பு, மற்றும் ஊரகப் பகுதி விவகாரங்கள் – வேலை வாய்ப்பு ஆகிய அமைச்சகங்கள் இந்த மானியங்களைக் கொண்டு எவ்விதத் திட்டங்களை நிறைவேற்றலாம், எவ்விதத் திட்டங்களை நிறைவேற்றக் கூடாது என்று கருத்துக்களைத் தெரிவிக்கலாம். மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, குறிப்பாக, நகர்ப்பகுதி மற்றும் ஊரகப் பகுதி உள்ளாட்சி மன்றங்களின் பல்வேறு வகைகளுக்கிடையே மானியங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக வழிகாட்டிக் குறிப்புகளை அளிக்கும் பொறுப்பு மாநிலங்களையேச் சாரும்.

2. மாநில அரசு விரும்பினால், தமிழ் நாடு, கருநாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் செய்யப்படுவது போன்று நகராட்சி நகர்ப் பகுதி வளர்ச்சி நிதியத்தின் மாதிரியிலான மாநில அளவிலான நிதி இடை நிறுவனங்கள் அல்லது அடிப்படை வசதி நிதியுதவி நிறுவனங்கள் மூலம் இந்நிதிகளை வழங்கலாம். நகர்ப்பகுதி அடிப்படை வளர்ச்சிப் பணிகளுக்கு நிதியுதவி

அளிக்க உலக வங்கி இதே அணுகுமுறையைத்தான் பின்பற்றி வருகின்றது. இந்நிதியுதவி நிறுவனங்கள், தொழில் நுட்ப உதவி அளிக்கலாம், திட்டங்களின் சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்யலாம். ஆதாயம் தரத்தக்கவை, பயனீட்டாளர் கட்டண அடிப்படையிலானவை ஆதாய நோக்கில்லாத சமூகப் பணியை நோக்கமாகக் கொண்டவை ஆகியவற்றை உரிய முறையில் கலந்து, திட்டங்களின் சாத்தியக் கூறு அறிக்கைகளைத் தயாரிக்கலாம், கடன்கள் பெறுவதிலும், வசூல் அட்டவணைகளைத் தயாரிப்பதிலும் உதவலாம். வீட்டு வசதி – நகர்ப்பகுதி வளர்ச்சி நிறுவனம், ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், வீட்டு வசதி + மேம்பாட்டு நிதியுதவி நிறுவனம், இந்திய தொழில் கடன் – முதலீட்டு நிறுவனம் (ICICI) வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து குறைந்த வட்டி வீதத்தில் நிறுவன நிதியுதவிகளை பெற்றுத் தரும் உதவியாளர்களாகவும் இவர்கள் பணியாற்றுவார்கள்.

3. இந்தத் தற்காலிக மானியங்கள், சொத்துக்களை உருவாக்குவதற்கான மூலதன மானியங்களா அல்லது இயக்கப் பராமரிப்புச் செலவுக்கானவையா என்ற வினா எழுப்பப்பட்டபோது, இயக்க மற்றும் பராமரிப்புச் செலவுக்காக நிதிக் குழு அறிக்கைகளின் தன்மையை மனதில் கொண்டு இம்மானியங்களை சொத்துக்ள் உருவாக்குவதற்குப் பயன்படுத்தலாமா அல்லது இயக்கப் பராமரிப்புச் செலவுக்குப் பயன்படுத்தலாமா என்பது பற்றி முடிவு எடுக்கும் உரிமையை சம்பந்தப்பட்ட மாநிலங்களிடத்திலேயே விட்டுவிடலாம் என்று அக்குழு கருதியது. இம்மானியங்கள் மாநில திட்டத்தின் ஒரு பகுதியாக அமையும் என்ற நிபந்தனையை மத்திய அரசு விதித்திருப்பதால் புதியத் திட்டங்களின் கூறுகளான, சம்பளங்கள், ஊதியங்கள் ஆகியவற்றுக்குப் பயன்படுத்துவதை தடுக்க இயலாது.

4. இம்மானியங்களைப் பெறுவதற்கு இணை மானியமாகப் பங்குத்தொகை செலுத்த வேண்டும் என்று பத்தாம் நிதி ஆணையம் வரையறுத்துள்ள நிபந்தனையின்படி, உள்ளாட்சி மன்றங்கள், குறிப்பாக, ஊரகப் பகுதி உள்ளாட்சி மன்றங்கள், பங்குத்தொகை செலுத்த முடியுமா என்பது ஐயமே. பத்தாம் நிதி ஆணையத்தால் ஓர் முன் நிபந்தனையாக விதிக்கப்பட்டு மத்திய அரசும் இந்த பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டிருப்பதால், இந்த இணைப் பங்குத்தொகையின் விகிதாச் சாரத்தையும், நிதி வகையில் வலுவான நிலையிலிருக்கும் உள்ளளாட்சி மன்றங்களிடமிருந்து மட்டுமே இப்பங்குத் தொகையைச் வசூலித்து, எஞ்சியுள்ள உள்ளாட்சி மன்றங்கள் செலுத்த வேண்டிய பங்குத்தொகையை மாநில அரசே வழங்கலாமா என்பது பற்றியும் மாநிலங்களே முடிவு செய்யலாம் என்று கருதப்பட்டது. எவ்வளவு பங்குத்தொகை செலுத்தவேண்டும், எந்தவகை உள்ளாட்சி மன்றங்களால் செலுத்தப்பட வேண்டும், மாநில அரசே செலுத்துமா உள்ளாட்சி மன்றங்களே இப்பங்குத்தொகையைச் செலுத்தலாமா என்பது பற்றிய விவரங்கள் மாநில அரசின் முடிவிற்கே விட்டுவிடப்பட்டன.

5.7.6. மானியங்களை மூலதனப் பணிகளுக்கோ அல்லது உள்ளாட்சி மன்றங்களில் மேலும் நல்ல முறையில் பயன்படுத்துவதற்காக சொத்துக்களின் பராமரிப்பை மேம்படுத்துவதற்கோ பயன்படுத்தலாம் என்பதால், பயன்படுத்தும் முறையில் நெகிழ்வுத் தன்மை காணப்படுவதை மேற்சொன்ன முடிவுகள் தெளிவாக உணர்த்துகின்றன. இந்நிதி ஒதுக்கீடுகளுக்கு இணையாக

உள்ளாட்சி மன்றங்கள் பங்குத்தொகை செலுத்த வேண்டும். இது பல்வேறு உள்ளாட்சி மன்றங்களுக்கு மாநில அரசு வழங்கும் நிதிகளுக்கும் கூடுதலாக வழங்கப்படும்.

5.7.7. 1996–97 ஆம் ஆண்டிற்குரிய நிதி ஒதுக்கீடு –களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக கருத்துத் தெரிவிக்குமாறு மாநில நிதி ஆணையத்தைத் தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டது. 1997–1998 ஆம் ஆண்டிலிருந்து 1999–2000 ஆண்டு வரையிலான கால அளவிற்குரிய மானியங்கள் பற்றி அறிக்கையில், நிதி ஒதுக்கீட்டுப் பகிர்வுக் கொள்கைகள் தெரிவிக்கப்படும் என்றும், 1996–97 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை அந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டை மூலதனச் சொத்துககளை மேம்படுத்துவதற்குரிய மூல நிதியாக வைத்துக் கொள்ளலாம் என்று மாநில அரசு பரிசீலிக்கலாம் என்றும், அல்லது அரசு தற்போது பின்பற்றிவரும் நிதிப் பகிர்வுக் கொள்கை அடிப்படையில் பல்வேறு உள்ளாட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கலாம் என்றும் மாநில நிதி ஆணையை குறிப்பிட்டது.

5.7.8. இந்தப் பின்னணியில், மாநில நிதி ஆணையம் 1997–98 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கும் அடுத்துவரும் நான்கு ஆண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை பகிர்ந்தளிப்பதற்குரிய கொள்கைகள் பற்றி தற்போது கருத்துத் தெரிவிக்க வேண்டியுள்ளது. மாநில நிதி ஆணையம் தெரிவித்துள்ள தேவை அடிப்படையிலான அளவுக்கு பராமரிப்பு பணிகளை அதிகரிப்பதற்கு, நிதி ஆதார ஒதுக்கீட்டு ஏற்பாடு பற்றிய கொள்கைகளை, மாநில நிதி ஆணையம் ஏற்கனவே பரிந்துரைத்துள்ளது.

5.7.9. 1997–98 ஆம் ஆண்டு முதல் 2001–02 ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு, முக்கிய பணிகளுக்கு இயக்கம் மற்றும் பராமரிப்புகளுக்குத் தேவைப்படும் தொகையையும் நிதிப் பற்றாக்குறை அளவையும் கணக்கிடப்பட்டுள்ளன. இப்பகுதியின் 6 ஆம் பிரிவில், இது தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

5.7.10. முக்கிய குடிமைப் பணிகளைப் பராமரிப்பதற்குரிய அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு, அதற்கேற்றவாறு மாநில நிதியிலிருந்து தொகையை பகிர்ந்தளிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதால், பத்தாம் நிதி ஆணையத்தின் இந்த நிதி ஒதுக்கீட்டை பணிகளின் அளவை உயர்த்த மூலதன நிதியாக ஒதுக்கலாம் என்று மாநில நிதி ஆணையம் கருதுகிறது.

5.7.11. இத்தொகை மூல நிதியாக வைத்துக்கொள்ளப்படலாம். மாநில அரசு இதற்கு இணையானதொரு தொகையை வழங்கலாம். உள்ளாட்சி மன்றங்களும் பங்கு நிதி வழங்கலாம். இதற்கு மேலாக, மூலதன நிதிக்கு வெளிச் சந்தையிலிருந்து கடன்கள் பெறலாம். பத்தாம் நிதி ஆணையம் கூறியுள்ளவாறு, உள்ளாட்சி மன்றங்களும் இணையான பங்கு ஏற்று இந்நிதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

5.7.12. ஊரகப் பகுதி உள்ளாட்சி மன்றங்கள், இணையான பங்குத்தொகை செலுத்தும் திறனுள்ளவையா என்பது ஐயத்திற்கிடமானதாகும். இதனால் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களை பங்குத்தொகை செலுத்த வற்புறுத்தலாம்.

5.7.13. சமுதாய வளர்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தும்போது, அதன் கீழ் வரும் திட்டங்களுக்காக, நிதி ஒதுக்கீடு செய்வதற்கு பொது மக்கள் அல்லது ஊரகப்பகுதி உள்ளாட்சி மன்றம் அதாவது ஊராட்சி ஒன்றியம் பங்குத்தொகை செலுத்த வேண்டும் என்று முன் நிபந்தனை விதிக்கப்பட்டதை இங்கு நினைவிற் கொள்ள வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள், இந்தப் பங்குத் தொகையை செலுத்த வேண்டும் என்றும் ஆனால், ஊராட்சிகள் செலுத்த வேண்டியதில்லை என்றும் வரையறுக்கலாம்.

**5.7.14.** ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிப் பகுதிகளில் பரவலாக வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி வருவதால், தேவையான இணையான உதவித் தொகையை அவைகள் செலுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுவது நியாயமே. மேலும், குடிமைப் பணிகளைப் பராமரிக்கும் பொறுப்பு முழுவதும் ஊராட்சிகளுக்கே பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் பெரும்பாலும் வளர்ச்சித் திட்டங்களை கவனிக்க வேண்டியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் சார்ந்துள்ள வகைப்பாடு, அவற்றின் நிதி நிலைத் திறனைக் குறிக்கும் ஒரு குறியீடாக இருப்பதால் ஊராட்சி ஒன்றியங்களின் வகைப்பாடுகளுக்கேற்ப பங்குத்தொகை செலுத்தும் முறை செயலில் முன்பு இருந்தது.

**5.7.15.** நிதியுதவிக்காக ஊராட்சி ஒன்றியங்களை மறு வகைப்பாடு செய்ய வேண்டும் என மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ளதால், ஊராட்சி ஒன்றியங்களின் வகைப்பாடுகளுக்கேற்ப, அதாவது உயர் வகை ஊராட்சி ஒன்றியங்கள் உயர் வீதத்திலும், கீழ் வகை ஊராட்சி ஒன்றியங்கள் குறைந்த வீதத்திலும் இணைப் பங்குத் தொகை செலுத்த வேண்டுமென வற்புறுத்தலாம்.

**5.7.16.** நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்த வரையில், அவற்றுக்கு அளிக்கப்படும் உதவித் தொகைக்கேற்ப அவை பங்குத்தொகை செலுத்துவது கட்டாயமாக்கப்படலாம். உள்ளாட்சி மன்றங்களின் நிலைகளின் அடிப்படையில், செலுத்த வேண்டிய பங்குத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருக்கலாம்.

| | பங்குத்தொகைகளின் அளவு | | |
|---|---|---|---|
| மாநகராட்சிகள் | 25 % | முதல் | 50% |
| நகராட்சிகள் | 20 % | முதல் | 30% |
| பேரூராட்சிகள் | 15 % | முதல் | 25% |

**5.7.17.** சமுதாய வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தும்போது, ஊராட்சி ஒன்றியங்கள் செலுத்த வேண்டியிருந்த பங்குத்தொகைகளும் தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள பங்குத்தொகைகளின் அளவும் வருமாறு:-

| ஊராட்சி ஒன்றியங்களின் வகைப் பாடு | சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் ஊராட்சி ஒன்றியங்களின் பங்குத்தொகை | தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள பங்குத்தொகையின் சதவீதம் |
|---|---|---|
| I | 60 | 25 |
| II | 50 | 25 |
| III | 40 | 15 |
| IV | 30 | 15 |
| V | 15 | 10 |
| VI | 5 | 5 |

இருப்பினும், இதுபற்றிய விவரங்களை அரசே கணக்கிட்டுக் கொள்ளலாம்.